வருகிறபோது, ஒவ்வோர் ஊராட்சியிலும் இவ்வளவு மக்கள்தொகை இருக்க வேண்டும் என்ற ஒரு கணக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், 40 ஆயிரம் வாக்குகள் உள்ள ஊராட்சிகள் எல்லாம் இருக்கின்றன. எனவே, ஊராட்சிகளைப் பிரிப்பதற்கும், ஒன்றியங்களை அதிகரிப்பதற்கும், பேரூராட்சிகளை அதிகரிப்பதற்கும் உரிய நடவடிக்கை எடுக்க மூத்த அதிகாரிகளைக் கொண்ட ஒரு Committee-ஐ அமைத்து, அவர்கள் மூலமாக இந்த மாதிரிதான் இருக்க முடியும் என்கிற ஒரு நிலையை எடுக்கவிருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும் பேசியிருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் பேசி Committee அமைத்தால், எங்கெங்கெல்லாம் மக்கள்தொகை அதிகமாக இருக்கிறதோ, அதற்குத் தகுந்தாற்போல், பேரூராட்சி என்றால், இவ்வளவு மக்கள்தொகை இருக்க வேண்டும்; நகராட்சி என்றால், இவ்வளவு மக்கள்தொகை இருக்க வேண்டும்; மாநகராட்சி என்றால், இவ்வளவு மக்கள்தொகை இருக்க வேண்டும் என அறுதியிட்டு, Committee அறிக்கை தந்த பிறகு அதைப் பற்றி யோசிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

22—

கலைக் கல்லூரி

***7442—திரு. மு.பெ. கிரி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, செங்கம் பகுதியில் கலைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) செங்கம் பகுதி அமைந்துள்ள திருவண்ணாமலை மாவட்டத்தில் தற்பொழுது 3 அரசு கலை மற்றும் அறிவியல்

TRUTH ALONE TRIUMPHS

2023 ஜனவரி 13]

கல்லூரிகளும், 24 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இதைத் தவிர ஒரு பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியும், 18 சுயநிதி பாலிடெக்னிக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ, மாணவியர்களின் உயர் கல்வியிக்கான தேவைகளை நிறைவு செய்து வருவதால், செங்கம் தொகுதி, செங்கம் பகுதியில் புதியதாக ஒரு கலைக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.*

திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில்தான் 3 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இருக்கின்றன. முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பெயரிலான ஒரு கல்லூரியும், செய்யாறு பகுதியில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரிலான ஒரு கல்லூரியும், வந்தவாசியில் ஒரு கல்லூரியும் இருக்கிறது. செங்கம் தொகுதியில் ஒரு கல்லூரிகூட இல்லை. கடந்த ஆண்டில் மட்டும் செங்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அரசுப் பள்ளிகளில் 12 ஆம் வகுப்பு படித்த மாணவர்கள் சுமார் ஐந்தாயிரத்திற்கும் மேல் இருக்கிறார்கள். தனியார் பள்ளிகளில் படித்த மாணவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தைத் தொடுகிறது. இது செங்கம் சட்டமன்றத் தொகுதி. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், மறுபரிசீலனை செய்ய முடியுமா என்று கேளுங்கள்.*

திரு. மு.பெ. கிரி: *செங்கம் தொகுதி எங்கே இருக்கிறது என்றால், கள்ளக்குறிச்சி மாவட்டம், தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம், திருப்பத்தூர் மற்றும் வேலூர் மாவட்டங்களை ஒட்டி, திருவண்ணாமலையிலிருந்து 80 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் எங்கள் தொகுதியைப் பற்றி அறிந்தவர். அங்கே பக்கத்தில் அமர்ந்துகொண்டிருக்கும் எங்கள் மாவட்ட அமைச்சர் அவர்களும் ஒரு கல்லூரி அறிவித்தாலும், அதை செங்கம் தொகுதிக்குத்தான் வாங்கித் தருவேன் என்று தினமும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–20

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்குள்ள அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் தங்கள் தொகுதிக்கு கல்லூரி வேண்டுமென்ற கோரிக்கையை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். நான் முதலிலேயே சொல்லியிருக்கிறேன். கடந்த ஓராண்டில் மட்டும் 31 கல்லூரிகள் துவக்கப்பட்டிருக்கின்றன. திருவண்ணாமலை மாவட்டத்தைப் பொறுத்தவரை, 8 தொகுதிகள் இருக்கின்றன. 8 அரசு கலைக் கல்லூரிகள் என்றால், சற்று பொறுமையாகத்தான் செய்ய முடியும். 3 கல்லூரிகள் இருக்கின்றன. ஆனால், செங்கம் தொகுதியில் மாணவர்கள் சேர்க்கை பற்றி இவர் சொல்கிறார். செங்கம் தொகுதியில் 4 சுயநிதி கல்லூரிகள் இருக்கின்றன. செங்கத்திலேயே ஒரு கல்லூரி இருக்கிறது. அந்த 4 கல்லூரிகளின்* total strength *2,384 பேர். ஆனால் 512 மாணவர்கள்தான் சேர்ந்திருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களும் எல்லா கோரிக்கைகளையும் கேட்டு, எப்போது தேவை என்பதைப் பொறுத்து, அரசு கலைக் கல்லூரிகள் இல்லாத இடங்களில் அதற்குத் தகுந்தமாதிரி நிரப்ப வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே நம்முடைய மாண்புமிகு சபாநாயகர் அவர்களும் ஒன்றைக் கேட்டிருக்கிறார். அவரும் அடிக்கடி அதைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருப்பார். எந்தெந்த தொகுதிகளிலே, கல்லூரிகளில் மாணவர்களின் சேர்க்கைக்கு வாய்ப்பில்லாமல் இருக்கிறதோ, அந்தத் தொகுதிகளிலே நிதிநிலைமைக்கேற்ப கல்லூரிகளை உருவாக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.*

திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை அரசு கலைக் கல்லூரி, செங்கம் தொகுதியிலிருந்து 90 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. இரண்டாவது, இந்த ஆண்டு திருவண்ணாமலை அரசு கலைக் கல்லூரியிலே மனு போட்ட மாணவர்களின் எண்ணிக்கை 15,000; அதிலே செங்கம் தொகுதியிலிருந்து மட்டும் மனு போட்டவர்கள்*

2023 ஜனவரி 13]

சற்றேறக்குறைய 4,800 பேர். அதிலே 1,200 மாணவர்கள், அரசு கலைக் கல்லூரியிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்ற தனியார் கல்லூரிகள், சுயநிதிக் கல்லூரிகள் எல்லாம் நெடுஞ்சாலையிலிருந்து நெடுந்தூரத்தில், 3 கிலோ மீட்டர், 4 கிலோ மீட்டர் தூரத்திலே இருக்கின்றன. போக்குவரத்து வசதி குறைவாக இருப்பதோடு, அந்தத் தனியார் கல்லூரிகள் தொலைவிலும் இருப்பதால், மாணவர்களின் சேர்க்கை குறைகிறது. நான் கேட்பது, செங்கம் சட்டமன்றத் தொகுதி, பக்கத்தில் இருக்கின்ற கலசப்பாக்கம் தொகுதி, புதுப்பாளையம் செங்கம் மற்றும் தண்டராம்பட்டை ஆகியவற்றை இணைக்கின்ற கோணாங்குட்டை கேட் என்ற கரியமங்கலம் ஊராட்சிக்குட்பட்ட இடத்தில் செங்கம் வருவாய் வட்டம் சர்வே எண் 397-ல் 16 ஏக்கர் அரசு நிலம் இருக்கிறது. ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே வைத்த 10 கோரிக்கைகளில் இதையும் நான் சேர்த்து எழுதிக் கொடுக்க இருந்தேன். வேண்டாம் என்பதால், அதை நான் நிறுத்திவிட்டேன்.

திருவண்ணாமலை மாவட்டம்தான் கல்வியில் பின்தங்கிய மாவட்டம். மலைப் பகுதிகளைக் காட்டிலும் செங்கம் தொகுதிதான் கல்வியிலே பின்தங்கிய தொகுதி. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடுத்து ஒரு கல்லூரி அறிவித்தாலும், அதை கட்டாயம் செங்கம் சட்டமன்றத் தொகுதிக்கு அறிவிக்க வேண்டும். பிற தொகுதிகளைப்போன்று பார்க்காமல், 234 தொகுதிகளிலும் பின்தங்கிய தொகுதி (மணியடிக்கப்பெற்றது) என்பதால், செங்கம் தொகுதிக்கு ஒரு கல்லூரி வேண்டும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். 16 ஏக்கர் நிலம் இருக்கிறது என்கிறார். அதைப் பார்த்து செய்து கொடுங்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே சொல்லிவிட்டேன். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோன்று சுயநிதிக் கல்லூரிகள் நிறைய இருக்கின்றன. அதில் போய்ச் சேருவதைவிட, அரசு கலைக் கல்லூரிகளில் சேர்வதைத்தான் மாணவர்கள் விரும்புவார்கள் என்பதும் அறிந்த உண்மைதான். இருந்தாலுங்கூட, அரசினுடைய நிதிநிலையை அறிந்துகொண்டு, உயர் கல்வித் துறையினுடைய

நிலைமையையும் உணர்ந்துகொண்டு, இதைச் செயல்படுத்த வேண்டும். அந்த அடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்த 10 தொகுதிக் கோரிக்கைகளிலே பல பேர், எங்களுக்கு கல்லூரிகள் வேண்டுமென்றுதான் கொடுத்திருக்கிறார்கள். அவற்றையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அந்த மாவட்டத்தினுடைய கல்வி நிதியைப் பொறுத்து பரிசீலிக்கலாம். அதேபோல, திருவண்ணாமலை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும், கல்வியில் மிகவும் பின்தங்கிய மாவட்டம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார். அதெல்லாம் ஒன்றும் இல்லை. அங்கே சுயநிதிக் கல்லூரிகள் மட்டும் 24 இருக்கின்றன. இந்த 24 கல்லூரிகளிலும் 16,161 இடங்கள் இருக்கின்றன. அதிலே 6,774 இடங்களில்தான் மாணவர்கள் சேர்ந்திருக்கிறார்கள். ஆக, சுயநிதிக் கல்லூரிகளைவிட, அரசு கலைக் கல்லூரிகளில் மாணவர்கள் சேர விரும்புகிறார்கள் என்பது உண்மை. ஆகவே, அரசினுடைய நிதிநிலைமைக்கேற்ப வருங்காலங்களிலே இதுகுறித்து பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி அவர்கள்.

திருமதி ம. வரலட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு தொகுதியில் இருபாலர் அறிவியல் கலைக் கல்லூரி இருக்கின்றது. ஆனால், அங்கு மாணவர்கள் சேர்க்கை ஆண்டுக்காண்டு அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. 1,500 மாணவர்கள் சேர்க்கைக்கு கிட்டத்தட்ட 10,000 applications வருகிற அளவுக்கு சேர்க்கை அதிகமாகி இருக்கின்றது. அதோடுமட்டுமல்லாமல், இப்போது முதல்வரின் புதுமைப் பெண் திட்ட அறிவிப்பின் காரணமாக, மாணவிகளுடைய சேர்க்கை விகிதம் அதிகமாக இருக்கின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனைக் கருத்தில்கொண்டு, ஒரு மகளிர் கலைக் கல்லூரியை என்னுடைய தொகுதியில் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், அங்கு இருக்கின்ற வேதாச்சலம் கலைக் கல்லூரியில் M.A. English and Tamil, M.Com. போன்ற முதுகலை பாடப் பிரிவுகள்தான் இருக்கின்றன. கூடுதலாக M.Sc. Physics, M.Sc. Chemistry, M.C.A. போன்ற பாடப் பிரிவுகளையும், அதற்கான ஆய்வக வசதிகளையும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

2023 ஜனவரி 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–25

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தெளிவாக அதற்கான பதில்களையெல்லாம் சொல்லிவிட்டேன். அவர் அங்குள்ள வேதாச்சலம் கலைக் கல்லூரியில் இன்னும் சில additional courses வேண்டுமென்று கேட்கிறார். அதை வேண்டுமானால் கொடுப்பதற்கு நாங்கள் ஏற்பாடுகளைச் செய்ய முடியும். மகளிரைப் பொறுத்தவரையில், அரசு கலைக் கல்லூரிகளிலே பெண்களுக்கான இடங்களை அதிகரிக்க வேண்டுமென்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின் அடிப்படையில், 20 சதவிகிதமாக இருந்தது. 25 சதவிகிதமாக உயர்த்திக் கொடுக்கப்பட்டிருகிறது. ஆனால், மொத்தமாக தமிழ்நாடு அளவில் பார்த்தால் அரசு கலைக் கல்லூரிகளில், மொத்த இடங்களில் கொஞ்சம்தான் காலியிடங்கள் இருக்கின்றன. பல கல்லூரிகளில் மாணாக்கர்கள் முழுமையாகச் சேர்ந்து விடுகின்றனர்; சில கல்லூரிகளில் முழுமையாகச் சேருவதில்லை. அந்த மாதிரி நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன. ஆகவே, இவற்றையெல்லாம் பரிசீலித்து, வருங்காலங்களில், எந்தெந்தப் பகுதிகளில் உண்மையிலேயே தேவைப்படுகிறதோ, அங்கு கல்லூரிகள் அமைப்பதற்கான ஏற்பாடுகள், நிதிநிலைமைக்கேற்ப செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே கேள்வி கேட்கக்கூடிய அனைத்து உறுப்பினர்களுக்கும் தெளிவான பதிலைச் சொல்லிவிட்டார்கள் என்று நினைக்கிறேன். அதனால் மேற்கொண்டு இதில் துணைக் கேள்வி தேவையில்லை என்று எண்ணுகிறேன்.

வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.